**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No. 26/2021**

**2025**ம் வருடம் பிப்ரவரி திங்கள் 05ம் நாள் 4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு.V.மனோஜ்குமார், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர : திரு. வினோத் (DW–1) கிராமம்:
தந்தை / கணவர் பெயர் : தொழில் :
வயது :

முதல்விசாரணை:–

1. நான் இவ்வழக்கின் 4ம் பிரதிவாதி நிறுவனத்தின் மேலாளராவேன். என் தரப்பு வாய்மொழி சாட்சியத்தை எழுத்துமூலமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னுடைய அறிவுக்கு முழுமையாய் தெரிந்த மட்டிலும் உண்மை என்று உறுதி கூறி இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள விபரங்களை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. 4ம் பிரதிவாதி நிறுவனத்திலிருந்து எனக்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அங்கீகாரக் கடிதம் பி.வா.சா.ஆ.1 ஆகும்.

3. கடந்த 14.09.2015ம் தேதியன்று 1ம் பிரதிவாதி தனது பாகச் சொத்துக்களை 2ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்த கிரையம் ஆவணம் எண்.2129/2015ன் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆகும்.

4. கடந்த 26.11.2015ம் தேதியன்று 2ம் பிரதிவாதியின் பவர் ஏஜெண்டான அழகப்பன் என்பவர் எங்கள் நிறுவனத்திற்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரையம் ஆவணம் எண்.2752/2015ன் சான்றிட்ட நகல்

பி.வா.சா.ஆ.3 ஆகும்.

5. தாவாச் சொத்திற்குரிய "அ" பதிவேட்டு நகல் பி.வா.சா.ஆ.4 ஆகும்.

6. தாவாச் சொத்திற்குரிய பட்டா எண்.1664 ன் கணினி நகல் பி.வா.சா.ஆ.5 ஆகும்.

7. வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>:-வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

S/d. ஜெ. சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.